முருகப்பெருமான் துணை

**மகான் மார்க்கண்டேயர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

07.01.2023, சனிக்கிழமை

1. மாதவ மூர்த்தியே அரங்கா
மண்ணுலகம் நல் கீர்த்திபெற
மேதகு வானவர்கள் சக்திகளை
மண்ணுலகில் இறங்கி அருளிட
2. அருளிட வகைசெய்யும் தேசிகா
அண்ணலே உன்பெருமை கூறி
அருளென அனுகூல ஆசிதனை
அறிவிப்பேன் சுபகிருது சிலைதிங்கள்
3. திங்களிலே மூவேழீர் திகதி காரி வாரம்
(சுபகிருது வருடம் மார்கழி மாதம் 23 ம் நாள் 07.01.2023, சனிக்கிழமை)
தேசிகனுக்கு மார்க்கண்டேயர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
ஓங்காரக் குடில் படைத்து அருளும்
4. அருளும் அரங்கன் அவதாரமே
அகிலத்தை ஞானலோகம் ஆக்கி
அருளும் தருமபலமும் கொண்டநல்
ஆளுமையை ஞானத்தலைமையாக்க
5. ஆக்கவே அற்புதம் நிகழ்த்திவர
அரங்கமகானை ஏற்று வந்து
பக்குவம் தரும் மகாமந்திர தீட்சையை
பழுதில்லா ஏற்று வணங்கிவர
6. வருகவே அனைவருக்கும் ஞானம்
வள்ளல் தன்மையாக இறங்கி
முருகப்பெருமான் ஆசியாக
முழுமை ஞானமாக அரங்கேறும்
7. அரங்கேறிட உலகம் எங்கிலும்
அரங்கன் வழி ஞானிகள் படை
வரங்களாகப் பெருகி இனிதே
வையகம் முழுமைபட காக்கப்படும்
8. காக்கும் மகா சக்தியாக
கருணை வடிவாக உள்ளதொரு
தேக்கமிலா சன்மார்க்க நெறியை
தெய்வ நெறியாக ஏற்று மக்கள்
9. மக்களெல்லாம் ஜீவ தயவு கூடிட
மரணம் வெல்லும் சக்தி கண்டிட
ஆக்கமுடன் சன்மார்க்க நெறியுடன்
அன்னதான சேவைதனையும் விருப்பமாக

10. விருப்பமாக ஏற்று மக்கள்
விடாது தொடர்ந்து செய்து
கருத்தாக உலகமெங்கும் நடத்திட
கந்தவேலன் கருணை வடிவாக

11. ஆகவே ஞானிகள் வெளிப்பாடு பரவி
அகிலம் எங்கிலும் ஞானத்தலைமை
மகான் அரங்கனால் அரங்கேறி
மண்ணுலகம் ஞான ஆட்சிதனை அடையும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–